// Reg Post //

திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் திருவள்ளூர் 602 001.

ஒ.மு.எண்.2491/அ3/2017 நாள். 07 –04–2017

பொருள்: CBSE பள்ளி – திருவள்ளூர் மாவட்டம் – கொட்டாமேடு, ஸ்ரீராம் வித்யாமந்திர் CBSE பள்ளி – LKG முதல் 6–ம் வகுப்பு வரை 2014–15–ம் ஆண்டு முதல் துவங்க தடையின்மைச் சான்று கோரும் கருத்துரு – குறைகள் – கருத்துருக்கள் – திருப்புதல் – சார்ந்து

பார்வை: 1) தாளாளர்,கொட்டம்மேடு ஸ்ரீராம் வித்யாமந்திர் பள்ளி தாளாளரின் கடிதம்
2) திருவள்ளூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்கள் பள்ளியை பார்வையிட்ட நாள்.04.04.2017

------

திருவள்ளூர் மாவட்டம், கொட்டம்மேடு ஸ்ரீராம் வித்யாமந்திர் CBSE பள்ளி – LKG முதல் 6–ம் வகுப்பு வரை 2014–15–ம் ஆண்டு முதல் துவங்கப்பட்ட பள்ளிக்கு தடையின்மைச்சான்று கோரும் கருத்துரு பார்வையில் 1–காணும் கடிதப்படி கருத்துரு பெறப்பட்டது.

பெறப்பட்ட கருத்துருவில் கீழ்கண்ட குறைபாடுகள் உள்ளன.

1) கட்டிட உரிமம் சான்றில் Form D–ல் 100 மாணவர்களுக்கு மட்டும் இடவசதி போதுமானதாக உள்ளது எனவும் கட்டிட உறுதி சான்றில் 1000/– மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது மாணவர்கள் எண்ணிக்கை முரண்பாடாக உள்ளது.
2) சுகாதாரச்சான்றில் நிலம் சார்ந்து சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. சர்வே எண் குறிப்பிட்டு சான்று முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.
3) குத்தகை ஆவணத்தில் சர்வே எண்.322/4, 322/2A, 2B, 2C ஆக மொத்தம் 3.24 ( 3Acers, 24 cents) குத்தகை போடப்பட்டுள்ளது. ஆனால் Sale Deed –ல் சர்வே எண்.321/BE 321/1,3,A5,321/8B,C,D,13A3, 13A4,6B, 7 என குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக உள்ளது.
4) அனைத்து ஆவணங்கள் பள்ளி தாளாளரின் கையொப்பம் இடப்படவேண்டும்.
5) நீதியரசர் சம்பத் குழு அறிக்கையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை எண்.131 பள்ளிக்கல்வி (B) துறை நாள். 10.08.2006–ன் படி பள்ளிக்கட்டிடங்கள் அனைத்தும் (G+2) தரை தளம் மற்றும் இரண்டு மாடிகளைக் கொண்டதாக மட்டுமே இருக்க வேண்டும். இப்பள்ளி கட்டிடம் (G+3) தரை தளம் மற்றும் முதல், இரண்டு, மூன்று தளங்களை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இது மேற்படி அரசாணைக்கு புறம்பானதாகும்.
6) விண்ணப்பக்கட்டணம் சரியான கணக்கு தலைப்பில் செலுத்தப்படவில்லை
7) (Class IA) கட்டிட பொறியாளர் தரச்சான்று வழங்கப்பட்டதற்கான மாவட்ட ஆட்சியரின் கடித நகல் இணைக்கப்படவேண்டும்.
8) 2014–ம் ஆண்டில் துவங்கப்பட்ட பள்ளிக்கு தற்போது தடையின்மைச்சான்று கோரும் காலதாமதத்திற்கு காரணம் விவரம்

மேற்குறிப்பிட்டுள்ள குறைகள் அனைத்தும் நிவர்த்தி செய்து கருத்துரு முழு வடிவில் அனுப்பி வைக்குமாறு பள்ளி தாளாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9) இப்பள்ளிக்கு சி.பி.எஸ்.இ பள்ளிக்கென ஒதுக்கப்பட்ட நிலம் சார்பாக மாவட்ட அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரு பெற்று முன்னிலைப்படுத்தப்படவேண்டும்

10) வருவாய் கோட்டாட்சியர் அளவில் இந்நிலம் கோயில் நலம், பஞ்சமி நலம், நீர்ப்பிடிப்பு பகுதி, மற்றும் அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை என சான்று பெற்று கருத்துருவில் இணைக்கப்படவேண்டும்.

இணைப்பு – பெறப்பட்ட கருத்துரு அனைத்தும்

முதன்மைக்கல்வி அலுவலர்
திருவள்ளூர்.

7/4/17

பெறுநர் – பள்ளித்தாளாளர்
ஸ்ரீராம் வித்யா மந்திர் CBSE பள்ளி, கொட்டாம்மேடு போஸ்ட்
திருநின்றவூர்–602024